1990 ஏப்ரல் 19]

4. அறிக்கை அளித்தல்

பொதுக் கணக்குக் குழு

திரு. சா. பீட்டர் ஆல்போன்ஸ் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, *1989–90* ஆம் ஆண்டிற்கான பொதுக் கணக்குக் குழுவின் நாற்பத்தொன்றாவது (ஒன்பதாவது சட்ட மன்றப் பேரவை) அறிக்கையைப் பேரவைக்கு அளிக்கிறேன்.

5. அறிவிப்புகள்

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: *1990* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.

6. சட்ட முன்வடிவுகள் (அறிமுகம் செய்தல்)

(அ) தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்டமுன்வடிவு, 1990

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, நான் கீழ்க்கண்ட தீர்மானத்தை மொழிகிறேன் :

''*1990* ஆம் ஆண்டு தமிழ்நாடு பொது விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்ய அனுமதி அளிக்கவேண்டும்.''

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பெற்று, நிறைவேற்றப்பெற்று, அனுமதி வழங்கப் பெற்றது.

மாண்புமிகு டாக்டர் மு. கருணாநிதி : இச்சட்ட முன்வடிவைப் பேரவைமுன் அறிமுகம் செய்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இச்சட்ட முன்வடிவு அறிமுகம் செய்யப் பெற்றிருக்கிறது.

5. அறிவிப்புகள்—தொடர்ச்சி.

(ஆ) தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன்வடிவு, 1990

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவைக்கு ஓர் அறிவிப்பு: *1990* ஆம் ஆண்டு தமிழ்நாடு கூடுதல் விற்பனை வரி (திருத்த) சட்ட முன் வடிவைப் பேரவையில் அறிமுகம் செய்ய ஆளுநர் தமது இசைவைத் தெரிவித்துள்ளார்.